www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

## பன்னிரெண்டாம் வகுப்பு

Reg.No.

## கணக்குப்பதிவியல்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 45

### பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10 x 1 = 10

1. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின் போது பகிர்ந்துதரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது.
   a) புதிய இலாபப் பகிர்வு விகிதம் b) பழைய இலாபப் பகிர்வு விகிதம்
   c) ஆதாய விகிதம் d) தியாக விகிதம்
2. மறுமதிப்பீட்டின் போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது
   a) ஆதாயம் b) நட்டம் c) இலாபம் d) மேற்கண்ட எதுவுமில்லை
3. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத் தொகை உடனடியாக செலுத்தாத போது, அது மாற்றப்படும் கணக்கு
   a) வங்கி க/கு b) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
   c) விலகும் கூட்டாளியின் கடன் க/கு d) பிற கூட்டாளிகளின் முதல் க/கு
4. முன்னுரிமைப் பங்கு என்பது
   i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் செலுத்துவதற்கானமுன்னுரிமையைப் பெற்ற பங்கு
   ii) கலைப்பின் போது பங்கு முதலை திரும்பப் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
   a) (i) மட்டும் சரியானது b) (ii) மட்டும் சரியானது
   c) (i) மற்றும் (ii) சரியானது d) (i) மற்றும் (ii) தவறானவை
5. ஒறுப்பிழப்புச் செய்த பங்குகளை மறுவெளியீடு செய்த பிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது
   a) பொதுக்காப்பு கணக்கிற்கு b) முதலினக் காப்பு கணக்கிற்கு
   c) பத்திர முனைமக் கணக்கிற்கு d) உபரி கணக்கிற்கு
6. ரூ.7 செலுத்தப்பட்ட, ரூ.10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை
   a) ரூ.10 b) ரூ.7 c) ரூ.4 d) ரூ.3
7. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
   A) அழைப்பு நிலுவை - i) முன்கூட்டிச் செலுத்திய அழைப்பு பணம்
   B) அழைப்பு முன்பணம் - ii) வெளியிட்ட பங்குகளை விட அதிகமாக ஒப்பப்பட்டது
   C) குறை ஒப்பம் - iii) செலுத்தப்பெறாத அழைப்பு பணம்
   D) மிகை ஒப்பம் - iv) வெளியிட்ட பங்குகளை விட குறைவாக ஒப்பப்பட்டது

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | (ii) | (i) | (iii) | (iv) |
| b) | (i) | (ii) | (iii) | (iv) |
| c) | (iii) | (i) | (iv) | (ii) |
| d) | (iv) | (ii) | (i) | (iii) |

8. இருப்புநிலைக் குறிப்பு, வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய _______ தகவல்களை வழங்குகிறது.
   a) ஒரு காலக் கட்டத்திற்கு மேலான b) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
   c) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான d) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய
9. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவி அல்ல?
   a) போக்கு பகுப்பாய்வு b) பொது அளவு அறிக்கை
   c) ஒப்பீட்டு அறிக்கை d) நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையியல்
10. நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்வின் பின்வரும் எந்த கருவி பல்வேறு ஆண்டுகளுக்கான விவரங்களை பகுப்பாய்வு செய்வதற்கு ஏற்புடையதாகும்?
   a) ரொக்க ஓட்ட பகுப்பாய்வு b) பொது அளவு அறிக்கை
   c) ஒப்பீட்டு அறிக்கை d) போக்கு ஆய்வு

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



பகுதி - ஆ

II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண். 11 கட்டாய வினா)* 4 x 2 = 8

11. கூட்டாளி விலகல் என்றால் என்ன?
12. அழைப்பு நிலுவை என்பதன் பொருள் என்ன?
13. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் பாலு, சந்துரு, ஆகாஷ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, மார்ச் 31 அன்று ஆகாஷ் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். ஆகாஷ் விலகும் நாளன்று, நிறுமத்தின் ஏடுகளில் இருந்த நற்பெயரின் மதிப்பு ரூ.60,000. மாறுபடும் முதல் முறை எனக்கொண்டு, தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.
(அ) ஏற்கனவே இருக்கின்ற நற்பெயர் முழுவதையும் போக்கெழுதுவதற்கு கூட்டாளிகள் தீர்மானித்தால்
14. ராஜன் நிறுமம் ரூ.6,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை வேல் நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அது பங்கொன்று ரூ.10 மதிப்புகளை முற்றிலும் செலுத்தப்பட்ட பங்குகளை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக வழங்கியது. பங்குகளை முகமதிப்பின் நிறுமம் வெளியிட்டால் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
15. கணேஷ் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| *விவரம்* | 2016-17 ரூ. | 2017-18 ரூ. |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 |
| இதர வருமானம் | 4,000 | 6,000 |
| செலவுகள் | 10,000 | 15,000 |
| வருமான வரி | 30% | 30% |

பகுதி - இ

III. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண். 16 கட்டாய வினா)* 4 x 3 = 12

16. தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
17. வினோத், கார்த்தி மற்றும் பிரணவ் என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018 ஏப்ரல் 1 அன்று பிரணவ் என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின் போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.
    i) நிலம் மற்றும் கட்டடத்தின் மதிப்பை ரூ.18,000 அதிகரிக்க வேண்டும்.
    ii) இயந்திரத்தின் மதிப்பை ரூ.15,000 குறைக்க வேண்டும்.
    iii) கொடுபட வேண்டிய செலவுகளுக்கு ரூ.8,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
    iv) பதிவுறா பொறுப்பு ரூ.8,000 என கண்டறியப்பட்டது.
    v) வாராக்கடன் ஒதுக்கு ரூ.7,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
18. A,B மற்றும் C என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று 'A' கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். விலகலுக்குப் பின் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்த பிறகு அவருடைய முதல் கணக்கு ரூ.1,50,000 வரவிருப்பைக் காட்டியது. பின்வரும் நிலைகளில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
    a) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது.
    b) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாக செலுத்தப்படவில்லை
    c) ரூ.1,00,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது, மீதத்தொகை இன்னும் செலுத்தப்படவில்லை.
19. கிருஷ்ணா நிறுமம் ரூ.10 மதிப்புள்ள 150 பங்குகளை பங்கொன்றுக்கு ரூ.4 இறுதி அழைப்புத்தொகை செலுத்தத் தவறியதால் ஒறுப்பிழப்பு செய்தது. அவற்றில் 100 பங்குகளை பங்கொன்று ரூ.9 வீதம் மறுவெளியீடு செய்தது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



20. ராஜ் மற்றும் ராம் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2019 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | ராஜ் நிறுமம் | ராம் நிறுமம் |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,00,000 | 2,00,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 70,000 | 1,20,000 |

பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 3 x 5 = 15

21. a) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் X,Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | கட்டடம் | 90,000 |
| X 1,00,000 | | இயந்திரம் | 60,000 |
| Y 80,000 | | கடனாளிகள் | 30,000 |
| Z 40,000 | 2,20,000 | சரக்கிருப்பு | 20,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | 30,000 | வங்கியிருப்பு | 50,000 |
| கடனீந்தோர் | 20,000 | இலாப-நட்ட க/கு | 20,000 |
| | 2,70,000 | | 2,70,000 |

'Z' 2019, ஜனவரி 1 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

i) கட்டடத்தின் மீது 10% மதிப்பேற்றம் செய்யப்பட்டது

ii) சரக்கிருப்பு மதிப்பு 5% குறைக்க வேண்டும்.

iii) ரூ.1,000 வாராக்கடன் ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

iv) பதிவுறா பொறுப்பு ரூ.8,000 என கண்டறியப்பட்டது.

v) விலகும் கூட்டாளிக்கு தொகை உடனடியாக செலுத்தப்பட்டது.

மறுமதிப்பீட்டு நட்டம் ரூ.1,000 கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் விலகலுக்குப் பின் நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

*(அல்லது)*

b) குமார் வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ரூ.10 வீதம், 20,000 நேர்மைப் பங்குகளை முகமதிப்பில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. பங்குகளுக்கானத் தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பதின்போது | ரூ.3 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ.4 |
| முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது | ரூ.3 |

30,000 பங்குகளுக்கான தொகை விண்ணப்பத்தின் போது பெறப்பட்டது. கூடுதலான விண்ணப்பத் தொகை திருப்பி அனுப்பப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

22. a) லலித் வரையறு நிறுமம் ரூ.10 வீதம் 30,000 நேர்மைப் பங்குகளை பொதுமக்களிடம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ.2, ஒதுக்கீட்டின் போது ரூ.3, மீதம் தேவைப்படும் போது செலுத்தப்பட வேண்டும். 50,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இயக்குநர்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்தனர்.

10,000 பங்குகளுக்கான விண்ணப்பம் - முழுவதும் ஒதுக்கீடு

35,000 பங்குகளுக்கான விண்ணப்பம் - 20,000 பங்குகள்

[மிகுதித் தொகை ஒதுக்கீட்டில் சரி செய்யப்படும்]

5,000 பங்குகளுக்கான விண்ணப்பம் - ஒதுக்கீடு இல்லை

அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. ஒதுக்கீடு பெறும் வரையிலான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக. *(அல்லது)*

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



b) பின்வரும் தகவல்களிலிருந்து, நிரஞ்சன் நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

| விவரம் | ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்: | | | |
| பங்குதாரர் நிதி | 500 | 550 | 600 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 200 | 250 | 240 |
| நடப்புப் பொறுப்புகள் | 100 | 80 | 120 |
| மொத்தம் | 800 | 880 | 960 |
| II. சொத்துகள்: | | | |
| நீண்ட காலச் சொத்துகள் | 600 | 720 | 780 |
| நடப்புச் சொத்துகள் | 200 | 160 | 180 |
| மொத்தம் | 800 | 880 | 960 |

23. a) யாஸ்மின் மற்றும் சக்தி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்.

| விவரம் | யாஸ்மின் நிறுமம் ரூ. | சக்தி நிறுமம் ரூ. |
|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்: | | |
| 1. பங்குதாரர் நிதி | | |
| a) பங்கு முதல் | 2,00,000 | 3,00,000 |
| b) காப்பும், மிகுதியும | 50,000 | 60,000 |
| 2. நீண்ட காலப் பொறுப்புகள்: | | |
| நீண்ட காலக் கடன்கள் | 1,50,000 | 1,80,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள்: | | |
| கணக்கு மூலம் செலுத்த வேண்டியவர்கள் | 1,00,000 | 60,000 |
| மொத்தம் | 5,00,000 | 6,00,000 |
| II. சொத்துக்கள் | | |
| 1. நீண்ட காலச் சொத்துக்கள் | | |
| a) நிலைச்சொத்துகள் | 2,00,000 | 3,00,000 |
| b) நீண்ட கால முதலீடுகள் | 50,000 | 1,20,000 |
| 2. நடப்புச் சொத்துகள் | | |
| சரக்கிருப்பு | 2,00,000 | 90,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் | 50,000 | 90,000 |
| மொத்தம் | 5,00,000 | 6,00,000 |

*(அல்லது)*

b) அறிவன் நிறுமம் பங்கொன்று ரூ.10 வீதம் பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டது.

விண்ணப்பத்தின் போது ரூ.2
ஒதுக்கீட்டின் போது ரூ.3 (முனைமம் உட்பட)
முதல் அழைப்பின் போது ரூ. 3
இறுதி அழைப்பின் போது ரூ. 3 எனச் செலுத்தப்பட வேண்டும்.

பின்வரும் தருணங்களில் பங்குகளை ஒறுப்பிழப்பு செய்வதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

i) 50 பங்குகளை வைத்திருக்கும் மோகன் என்பவர் இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகையை செலுத்தத் தவறியதால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

ii) 50 பங்குகளை வைத்திருக்கும் மோகன் என்பவர் ஒதுக்கீட்டுத் தொகை, முதல் அழைப்பு, இறுதி அழைப்புத் தொகை செலுத்தத் தவறியதால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

iii) 50 பங்குகளை வைத்திருக்கும் மோகன் என்பவர் ஒதுக்கீட்டுத் தொகை, முதல் அழைப்புத் தொகை செலுத்தத் தவறியதால் முதல் அழைப்பிற்கு பின் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned by CamScanner

**மதுரை(மா)+2கணக்குப்பதிவியல் 2ம் பருவத்தேர்வு2019**

**சரியான விடை 10X1=10**

1. (ஆ) பழைய லாப பகிர்வு விகிதம்
2. (ஆ) நட்டம்
3. (இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு
4. (இ) 1 மற்றும் 2 சரியானது
5. (ஆ) முதலினக்காப்பு கணக்கிற்கு
6. (ஈ) ரூ 3
7. (இ) III I IV II
8. (ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
9. (ஈ) நிர்ணயிக்கப்பட்ட அடக்க விலையியல்
10. (ஈ) போக்கு ஆய்வு

**ஏதேனும் 4வினாக்களுக்கு விடையளி4X2=8**

**11.கூட்டாளி விலகல்** ஒரு கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து, கூட்டாளி ஒருவர் வெளியே சென்றால், அது கூட்டாளி விலகல் எனப்படும்.

**12. அழைப்பு நிலுவை** பங்குதாரர் ஒருவர் தான் செலுத்த வேண்டிய ஒதுக்கீட்டுத் தொகை அல்லது அழைப்புத் தொகையை செலுத்தத் தவறினால், இன்னமும் செலுத்தப்படாமல் உள்ள தொகை 'அழைப்பு நிலுவை' எனப்படும். அதாவது அழைக்கப்பட்டும், செலுத்தப்படாமல் உள்ள தொகை 'அழைப்பு நிலுவை' எனப்படும்.

**13. குறிப்பேட்டுப்பதிவு**

| | | |
|---|---|---|
| பாலு முதல் க/கு ப | 30000 | |
| சந்துரு முதல் க/கு ப | 18000 | |
| ஆகாஷ் முதல் க/கு ப. | 12000 | |
| நற்பெயர் க/கு | | 60000 |

**14.பங்குகளை முகமதிப்பில் வெளியிடும் போது**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| இயந்திர க/கு ப<br>வேல் நிறும க/கு | 600000 | <br>600000 |
| வேல் நிறும க/கு ப.<br>ப. முதல் க/கு | 600000 | <br>600000 |

**15.ஒப்பீட்டு வருமான அறிக்கை**

| விவரம் | 2016 - 17 | 2017 - 18 | தொகையின் கூடுதல் கூடுதல் (+) அல்லது குறைவு (-) | சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (-) |
|---|---|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30000 | 45000 | +15000 | +50 |
| (+) இதர வருமானங்கள் | 4000 | 6000 | +2000 | +50 |
| மொத்த வருமானம் | 34000 | 51000 | +17000 | +50 |
| (-) செலவு | 10000 | 15000 | +5000 | +50 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 24000 | 36000 | +12000 | +50 |
| கழிக்க - வருமானவரி | 7200 | 10800 | 3600 | 50 |
| வரிக்கு பின்னர் உள்ள இலாபம் | **16800** | **25200** | **8400** | **50** |

**ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி :4X3=12**

| 16. அடிப்படை | தியாக விகிதம் | ஆதாய விகிதம் |
|---|---|---|
| பொருள் | புதிய கூட்டாளிக்கு, பழைய கூட்டாளிகள், தியாகம் செய்து கொடுக்கும் இலாபப் பங்கின் விகிதாச்சாரம் ஆகும். | தொடரும் கூட்டாளிகள், விலகும் கூட்டாளியிடம் இருந்து பெறும் ஆதாயப் பங்கின் விகிதாச்சாரம் ஆகும். |
| நோக்கம் | இது, தியாகம் செய்யும் கூட்டாளிகளுக்கு, நற்பெயர் தொகையைச் சரிக்கட்டிக் கொள்வதை தீர்மானிப்பதற்காகக் கணக்கிடப்படுகிறது | இது, ஆதாயம் பெறும் கூட்டாளிகளுக்கு, நற்பெயர் தொகையைச் சரிக்கட்டிக் கொள்வதை தீர்மானிப்பதற்காகக் கணக்கிடப்படுகிறது. |
| கணக்கிடும் காலம் | புதிய கூட்டாளி சேர்ப்பின் போது கணக்கிடப்படுகிறது | கூட்டாளி ஒருவர் விலகும் போது கணக்கிடப்படுகிறது. |
| கணக்கிடும் முறை | பழைய இலாப விகிதத்திற்கும் புதிய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும். தியாக விகிதம் = பழைய இலாப விகிதம் – புதிய இலாப விகிதம் | புதிய இலாப விகிதத்திற்கும்பழைய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும்.ஆதாய விகிதம் = புதிய இலாப விகிதம் – பழைய இலாப விகிதம் |

**17. குறிப்பேட்டுப்பதிவு**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| நி & கட்டிட க/கு ப.<br>மறுமதிப்பீட்டு க/கு | 18000 | <br>18000 |
| மறுமதிப்பீட்டு க/கு ப.<br>இயந்திர க/கு | 15000 | <br>15000 |
| மறுமதிப்பீட்டு க/கு ப.<br>கொவே செலவு க/கு | 8000 | <br>8000 |
| மறுமதிப்பீட்டு க/கு ப.<br>கொவே பொறு க/கு | 8000 | <br>8000 |
| மறுமதிப்பீட்டு க/கு ப.<br>வாராக்கடன் க/கு | 7000 | <br>7000 |

**ப. மறுமதிப்பீட்டுக் கணக்கு வ.**

| விவரம் | ரூ | விவரம் | ரூ |
|---|---|---|---|
| இயந்திர க/கு | 15000 | கட்டடம் க/கு | 18000 |
| கொ வே செ க/கு | 8000 | வி முதல் | **8000** |
| கொடுபடாபொறுப்புக/கு | 8000 | கா முதல் | **8000** |
| வாரான் கடன் | 7000 | பி முதல் | **4000** |
| | 38000 | | 38000 |

**18. குறிப்பேட்டுப்பதிவு**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| A முதல் க/கு ப<br>வங்கி க/கு | 150000 | <br>150000 |
| A முதல் க/கு ப<br>A கடன் க/கு | 150000 | <br>150000 |
| A முதல் க/கு ப<br>வங்கி க/கு<br>A கடன் க/கு | 150000 | <br>100000<br>50000 |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**19. மறுவெளியீட்டுக்கானகுறிப்பேட்டுப்பதிவு**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| பங்குமுதல் க/கு ப. (150X10)<br>ப.இறுதிஅழைப்பு க/கு(150X4)<br>ப.ஒறுப்பிழப்பு க/கு (150X6)<br>(ஒறுப்பிழப்புக்கானபதிவு) | 1500 | <br>600<br>900 |
| வங்கிக/கு ப. (100X9)<br>ப.ஒறுப்பிழப்பு க/கு ப. (100X1)<br>பங்குமுதல் க/கு<br>(மறுவெளியீட்டுபதிவு) | 900<br>100 | <br><br>1000 |
| ப.ஒறுப்பிழப்பு க/கு ப.<br>முதலினகாப்பு க/கு<br>(மறுவெளியீட்டு இலாபம் முதலினகாப்புக்கு மாற்றியது) | **500** | <br>**500** |

**20. பொதுஅளவுவருமானஅறிக்கை**

| விவரம் | ராஜ் நிறுமம் | | ராம் நிறுமம் | |
|---|---|---|---|---|
| | தொ | விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம் | தொகை | விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம் |
| விற்பனைமூலம் பெற்றவருவாய் | 100000 | 100 | 200000 | 100 |
| கூட்டுக - இதரவருமானங்கள் | 10000 | 10 | 30000 | 15 |
| மொத்தவருமானம் | **110000** | **110** | **230000** | **115** |
| கழிக்க - செலவுகள் | 70000 | 70 | 120000 | 60 |
| வரிக்குமுன்னர் உள்ள இலாபம் | **40000** | **40** | **110000** | **55** |

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 3X5=15**

**21.அ. ப முதல் கணக்கு வ**

| வி | X | Y | Z | வி | X | Y | Z |
|---|---|---|---|---|---|---|---|
| இ/ந | 10000 | 6000 | 4000 | கீ/கொ கா | 100000 | 80000 | 40000 |
| மறு நட் | 500 | 300 | 200 | ஈட்டு நதி | 15000 | 9000 | 6000 |
| வங்கி | | | **41800** | | | | |
| இரு கீ/இ | **104500** | **82700** | | | | | |
| | 115000 | 89000 | 46000 | | 115000 | 89000 | 4600 |

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்பு | | | சொத்து | | |
|---|---|---|---|---|---|
| முதல்<br>X<br>Y | <br>104500<br><br>82700 | <br><br>187200 | கட்டிட<br>(+)<br>மதிப் | 90000<br><br>9000 | 99000 |
| கடனீந் | | 20000 | இயந் | | 60000 |
| பதிவுறா பொறு | | 8000 | கடனாளி (-)<br>ஐய | 30000<br>1000 | <br><br>29000 |
| | | | சரக்<br>(-)<br>குறை | 20000<br>1000 | <br><br>19000 |
| | | | வங்கி<br>(-)Z<br>செ | 50000<br>41800 | <br>8200 |
| | | **215200** | | | **215200** |

**21.ஆ.**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| வங்கி க/கு ப.<br>பங்குவிண்ணப்பக க/கு | 90000 | <br>90000 |
| பங்கு விண்ணப்பக க/கு ப.<br>பங்கு முதல் க/கு | 60000 | <br>60000 |
| பங்கு விண்ணப்பக க/கு ப.<br>வங்கி க/கு | 30000 | <br>30000 |
| பங்கு ஒதுக்கீட்டுக் க/கு<br>பங்கு முதல் க/கு | 80000 | <br>80000 |
| வங்கி க/கு ப.<br>பங்குஒதுக்கீட்டுக் க/கு | 80000 | <br>80000 |
| ப.முமஇ அழைப்புக/கு ப.<br>பங்கு முதல் க/கு | 60000 | <br>60000 |
| வங்கி க/கு ப.<br>ப.முமஇஅழைப்புக/கு | 60000 | <br>60000 |

**22.அ.**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| வங்கி க/ ப.<br>பங்குவிண்ணப்பக க/கு | 100000 | <br>100000 |
| பங்கு விண்ணப்பக க/கு ப.<br>பங்கு முதல் க/கு | 60000 | <br>60000 |
| பங்கு விண்ணப்பக க/கு ப.<br>வங்கி க/கு | 10000 | <br>10000 |
| பங்கு விண்ணப்பக க/கு ப.<br>ப.ஒதுக்கீடு க/கு | 30000 | <br>30000 |
| பங்கு ஒதுக்கீட்டுக் க/கு<br>பங்கு முதல் க/கு | 90000 | <br>90000 |
| வங்கி க/கு ப.<br>பங்குஒதுக்கீட்டுக் க/கு | 60000 | <br>60000 |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**22.ஆ. நிரஞ்சன் நிறுமத்தின் போக்குபகுப்பாய்வு**

| விவரம் | ரூஆயிரங்களில் | | | போக்குசதவீதங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1ம் ஆ | 2ம் ஆ | 3ம் ஆ | 1ம் ஆ | 2ம் ஆ | 3ம் ஆ |
| பங்குதாரர் நிதி | 500 | 550 | 600 | 100 | **110** | **120** |
| நீண்டகாலப் பொ | 200 | 250 | 240 | 100 | **125** | **120** |
| நடப்புப் பொறுப்பு | 100 | 80 | 120 | 100 | **80** | **120** |
| மொத்தம் | 800 | 880 | 960 | 100 | **110** | **120** |
| **சொத்துக்கள்** | | | | | | |
| நீண்டகால சொ | 600 | 720 | 780 | 100 | **120** | **130** |
| நட. சொ. | 200 | 160 | 180 | 100 | **80** | **90** |
| மொத்தம் | 800 | 880 | 960 | 100 | **110** | **120** |

**23.அ. யாஸ்மின் மற்றும் சக்தி நிறுமத்தின் பொதுஅளவு நிதி நிலையறிக்கை**

| விவரம் | யாஸ் தொ | மொ சொ % | சக்தி தொ | மொ சொ % |
|---|---|---|---|---|
| **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | | | |
| பங்குதாரர்நிதி | 200000 | 40 | 300000 | 50 |
| காப்பு | 50000 | 10 | 60000 | 10 |
| நீண்டகாலப் கடன் | 150000 | 30 | 180000 | 30 |
| நடப்புப் பொறுப்புகள் | 100000 | 20 | 60000 | 10 |
| மொத்தம் | 500000 | 100 | 600000 | 100 |
| **சொத்துக்கள்** | | | | |
| நிலைச்சொத்து | 200000 | 40 | 300000 | 50 |
| நீண்டகால முதலீடுகள் | 50000 | 10 | 120000 | 20 |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | | |
| சரக்கிருப்பு | 200000 | 40 | 90000 | 15 |
| ரொக்கம் | 50000 | 10 | 90000 | 15 |
| மொத்தம் | 500000 | 100 | 600000 | 100 |

**23ஆ. குறிப்பேட்டுப்பதிவு**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| பங்குமுதல் க/கு ப. (50X10) | 500 | |
| ப.இறுதிஅழைப்பு க/கு(50X3) | | 150 |
| ப.ஒறுப்பிழப்பு க/கு (50X7) | | 350 |
| (ஒறுப்பிழப்புக்கானபதிவு) | | |

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| பங்குமுதல் க/கு ப. (50X10) | 500 | |
| பத்திர முனைம க/கு ப. (50X1) | 50 | |
| ப.ஒதுக்கீடு க/கு(50X3) | | 150 |
| ப.முதல்அழைப்பு க/கு(50X3) | | 150 |
| ப.இறுதிஅழைப்பு க/கு(50X3) | | 150 |
| ப.ஒறுப்பிழப்பு க/கு (50X2) | | 100 |
| (ஒறுப்பிழப்புக்கானபதிவு) | | |

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| பங்குமுதல் க/கு ப. (50X7) | 350 | |
| பத்திர முனைம க/கு ப. (50X1) | 50 | |
| ப.ஒதுக்கீடு க/கு(50X3) | | 150 |
| ப.முதல்அழைப்பு க/கு(50X3) | | 150 |
| ப.ஒறுப்பிழப்பு க/கு (50X2) | | 100 |
| (ஒறுப்பிழப்புக்கானபதிவு) | | |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593